# கனவுகள் பற்றிய சிக்மன்ட் பிரைட்டின் கருத்துக்களும் இஸ்லாமிய பார்வையும் - ஓர் ஒப்பீட்டு ஆய்வு

Shireen Jahan. B.[1] , Aaysha. A. M. [2]

[1&2] Department of Social Sciences, South Eastern University of Srilanka.
Correspondence: shireenjahan94@gmail.com, Aayshashafnazs08@gmail.com

**ஆய்வுச்சுருக்கம் :** கனவுகள் பற்றிய விஞ்ஞான அறிவியல் ஆராய்ச்சிகளானவை பல உளவியலாளர்களால் நடத்தப்பட்டு இருந்தாலும் சிக்மன்ட் பிரைடின் கனவு பற்றிய விளக்கம் உளவியல் ரீதியில் முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. ''கனவுகளின் விளக்கம்'' எனும் நூலில் குறிப்பிட்டுள்ள கனவுகள் பற்றிய விளக்கங்களை இஸ்லாமிய பார்வையில் கனவுகளின் விளக்கங்களுடன் ஒப்பிட்டு ஆராயும் வகையில் இவ்வாய்வானது அமைந்தள்ளது. நனவிலி மனதில் பதிந்துள்ள விடயங்களே கனவுகளாக தோன்றுகின்றன என்ற சிக்மன்ட் பிரைடின் கருத்தானது இஸ்லாத்தின் கனவுகள் பற்றிய விளக்கத்தின் மூன்றின், ஒரு பகுதியாக இருப்பதுடன், எதிர்காலத்தை முன்னறிவிப்பு செய்யும் கனவுகள் பற்றியும், கனவுகளுக்கான குறியீட்டு விளக்கம் தொடர்பான கருத்துக்களும் பொதுவானதாக இருந்தாலும் அவை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள விதமும், அவற்றிற்கான அர்த்தமும் வேறுபட்ட வகையில் காணப்படுகின்றன. மனிதன் காணும் கனவுகள் அனைத்தும் பகுத்தறிவிற்கு உட்பட்டவையாக இல்லாமல் இருப்பினும் அவை அர்த்தமுடையவையே என்று பிராய்ட் கூறியுள்ள கருத்தானது இஸ்லாமிய சமய பார்வையில் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மாறாக இறைவன் புறமிருந்து வரும் நல்ல கனவுகள் மாத்திரமே அர்த்தமுடையவை என்று கூறுகின்றது. இவ்வாறு உளவியலுக்கும் சமயத்திற்குமான அடித்தளங்களில் கனவுகள் பற்றிய கருத்துக்களை இரண்டாம்நிலை தரவுகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வில் விளக்கமுறையும், ஒப்பீட்டு முறையும் பகுப்பாய்விற்காக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**பிரதான சொற்கள் :** கனவுகள், சிக்மன்ட் பிரைட், இஸ்லாம், நனவிலி, உளவியல்

## அறிமுகம்

ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக மனிதன் கனவுகளைப் புரிந்துக்கொள்வதற்காக முயன்று வருகிறான். கனவு காண்பது மனிதர்களுக்கு பொதுவான ஒரு செயற்பாடுதான் என்றாலும் மனிதர்கள் வாழுகின்ற சமூகங்களுக்கு ஏற்ப கனவுகள் பற்றிய நம்பிக்கைகளும் கருத்துக்களும் வித்தியாசமாக காணப்படுகின்றன. மொசப்பதேமிய மன்னர்கள் தங்களது கனவுகளை மெழுகு, அரக்கு போன்றவற்றில் எழுதிவைத்தும், எகிப்திய நாகரிகத்தில் ''100 பொதுவான கனவுகள்'' என்ற புத்தகத்திலும் தத்தமது கனவுகளை எழுதிவைத்திருந்தனர். நாகரிக வளர்ச்சிக்கு பின்னர் சமயங்களின் வளர்ச்சியில் இஸ்லாம், இந்து, பௌத்தம் மற்றும் கிறிஸ்தவ சமயங்களில் கனவுகள் பற்றிய கருத்துக்கள் பலவாறு காணப்படுகின்றன. பொதுவாகவே ஒவ்வொரு சமயமும் கனவு சம்பந்தமாக கொண்டுள்ள நம்பிக்கைகள் பற்றி அச்சமயம் சார் புனித நூல்களில் இருந்து அறியக்கூடியதாக இருக்கும். கனவுகள் பற்றியும், அதன் வகைகள் பற்றியும், அதன் அர்த்தங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ள ஒரு சமய நூலாக அறியப்படும் புனித அல்-குர்ஆன் ஆனது இஸ்லாமிய பார்வையில் கனவுகள் தொடர்பான

நம்பிக்கைகள், விளக்கங்கள் என்பவற்றை முன்வைக்கிறது. அத்துடன் முஹம்மத் நபி(ஸல்) அவர்களுடைய ஹதீஸ்களும் கனவுகள் தொடர்பான விளக்கங்களை தருகின்றன. சமய அடிப்படையில் மட்டுமன்றி கனவுகள் பற்றிய சில மூட நம்பிக்கைகளைக் கொண்ட சமூகங்களும் காணப்படுகின்றன. கனவுகள் எவ்வாறு நிகழ்கின்றன, அதற்கான காரணம் என்ன? என்ற தெளிவின்மை கனவுகள் பற்றிய அறிவியல், விஞ்ஞான விளக்கங்கள் கனவு பற்றிய தெளிவான சிந்தனைகளை முன்வைப்பதன் மூலமே அதனை தீர்க்க முடியும்.

கனவுகள் பற்றிய அறிவியல் ரீதியான ஆய்வு Oneirology என அழைக்கப்படுகின்றது. Oneirology என்பது கிரேக்க சொற்களான oneiron , logia என்பவற்றில் இருந்து தோற்றம் பெற்றதாகும். இங்கு oneiro ''கனவு'' என்றும் logia ''ஆய்வு'' எனவும் பொருள்படுகிறது. எனவே கனவுகளின் ஆய்வு எனப்படும் Oneirology கனவுகள் ஏன்? எவ்வாறு? எப்படி? தோன்றுகின்றன என்பதை பற்றியும் விஞ்ஞான ரீதியாக ஆராய்கிறது.

கனவுகள் பற்றிய பல்வேறு ஆராய்ச்சிகளின் மத்தியில் பிரசித்தி பெற்ற கனவுகள் பற்றிய கோட்பாடு உளவியல் அடிப்படையிலேயே அமைந்தது. உளப்பகுப்பாய்வின் தந்தையான சிக்மன்ட் பிரைட் தனது உளப்பகுப்பாய்வு கோட்பாட்டை நிறுவ மேற்கொண்ட ஆய்வுகளின் தொடர்ச்சியாக கனவுகளுக்கும், ஆழ்மனத்திற்கும், நரம்பியல் நோய்களுக்கும் தொடர்பு உண்டு என நம்பிய அவர் நூற்றுக்கணக்கான கனவுகளை பற்றி ஆராய்ந்து தனது ''கனவுகளின் விளக்கம்'' (The Interpretation of Dreams) என்ற நூலை 1900இல் வெளியிட்டார். பிராய்ட் மனிதனிற்கு கனவுகள் தோன்றுவதற்கு காரணம் அவனது நனவிலி மனதில் ஒடுக்கப்பட்ட நிறைவேறாத ஆசைகளும் எண்ணங்களுமே எனவும் அவற்றை நிறைவேற்றிக் கொள்ள உதவும் ஒரு வகையான உந்தியே கனவு எனவும் கூறுகிறார். இதனை அவர் பல கனவுகளை பகுத்தாராய்ந்ததன் வழியாக கனவுக் கோட்பாட்டை முன்மொழிந்ததுடன் மனிதனுக்கு தோன்றும் ஒவ்வொரு கனவும் அர்த்தமுடையதும் உட்பொருள் கொண்டதும் எனக் குறிப்பிட்டார். மேலும் இக்கனவுகள் நனவிலியின் விம்பங்களாக அமைவதனால் அவை பெரும்பாலும் பகுத்தறிவிற்கு உட்பட்டவையல்ல எனவும் குறிப்பிடுகின்றார்.

இந்த கனவுகள் குறித்த சிக்மண்ட் பிரைய்டின் விளக்கங்களுடன் இஸ்லாமிய விளக்கங்கள் எவ்வாறு ஒத்துப் போகின்றன மற்றும் வேறுபடுகின்றன என்பதனை ஒப்பிடுவதாக இவ்வாய்வு அமைகிறது.

**ஆய்வுப்பிரச்சினை**

கனவுகள் பற்றிய சிக்மன்ட் பிரைட்டின் கருத்துக்கள், கனவுகள் பற்றிய இஸ்லாமிய பார்வையுடன் எவ்வகையிலாவது தொடர்புப்படுகிறதா?

**ஆய்வின் நோக்கம்:**

- கனவுகள் ஏன்? எவ்வாறு? எப்படி? தோன்றுகின்றன என்பதனையும் அவை உளவியல் ரீதியாக ஏற்படுத்தும் தாக்கங்களையும் இனங்காணல்.
- கனவுகள் பற்றிய சிக்மன்ட் பிரைடின் விளக்கம் மற்றும் கனவுகள் பற்றிய இஸ்லாமிய விளக்கம் என்பவற்றை ஒப்பிட்டு ஆராய்தல்.

**ஆய்வு முறையியல்:**

இவ்வாய்வானது எண்ணக்கரு ரீதியான பகுப்பாய்வாக அமைவதனால் இரண்டாம் நிலைத்தரவுகளை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. இந்தவகையில் கனவுகள் தொடர்பான சிக்மண்ட் பிரையிடின் விளக்கங்களடங்கியதும், இஸ்லாத்தில் கனவுகள் தொடர்பான விடயங்களும் உள்ளடங்கிய நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள், சஞ்சிகைகள், இணையத்தளம் மற்றும் Youtube காணொலிகள் என்பவற்றிலிருந்து தரவு சேகரிக்கப்பட்டு அவை ஒப்பீட்டு ரீதியில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

**இலக்கிய மீளாய்வு:**

1. நாகூர் ரூமியினால் மொழிபெயர்க்கப்பட்ட சிக்மன் பிராய்டின் ''கனவுகளின் விளக்கம்'' எனும் நூலானது 9 அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டு அவற்றில் முறையே சிக்மன்ட் பிராயிட்டினால் கனவுகள் பற்றி விஞ்ஞான ஆராய்ச்சிகள், கனவுகளை விளக்கும் முறை, கனவின் சிதைவு, கனவு செய்யும் வேலைகள் போன்ற பல கனவுகளுடன் தொடர்புடைய விடயங்கள், கனவுடனான உதாரணங்களைக் கொண்டு விளக்கப்பட்டுள்ளது.
2. மாஹிர்.ஐ.எல்.எம் மற்றும் அர்ச்சனா.பீ (2016) என்பவர்களால் எழுதப்பட்ட ''கனவு பற்றிய எண்ணக்கரு: சிக்மன்ட் பிராய்டின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பகுப்பாய்வு'' எனும் தலைப்பிலான உளவியல் நோக்கிலமைந்த ஆய்வு கட்டுரையானது சிக்மன்ட் பிராய்ட் கனவுகள் குறித்து குறிப்பிடுபனவற்றை சுட்டிக்காட்டுவதோடு பகுத்தறிவுக்குப் பொருத்தாத காட்சிகளைக் கொண்ட கனவுகளின் அர்த்த வெளிப்பாட்டின் சாத்தியங்களை விளக்குவதாக காணப்படுகின்றது.
3. றியால்.ஏ.எல்.எம் (2016) என்பவரின் ''உளவியல் மூலக்கோட்பாடுகள்'' எனும் நூலில் பிராய்டிய உளப்பகுப்பாய்வு எனும் அத்தியாயத்தில், பிராய்டிய உளபகுப்பு முறையான தடையில் இயைபு முறை(Free Association), தடை இயைபு முறை(Attention to Resistance), கனவு விளக்க முறை (Interpretation of Trans Ference) என்பன குறிப்பிடப்பட்டுள்ளதோடு பிராய்டின் குழந்தையின் உளவளர்ச்சிப் படிநிலை, உளத்தின் வகைப்பிரிப்பான நனவு மனம், நனவிலி மனம், முன்நனவு மனம் என்பனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. Marius Dumitrescu (2019) “Revealing the Unconscious through Dreams in Sigmund Freud’s Psychoanalysis” எனும் ஆய்வு கட்டுரையில், இவர் நனவில் ஒடுக்கப்பட்ட விடயங்கள் நனவிவியில் அடக்கப்பட்ட உந்துகளின் இடமாற்றம் (Transfer of repressed drived) மூலம் குறியீட்டு வடிவில் செயலற்றறவையாக (Passively) உள்ளடக்கங்களை கொண்டவைகளாக கனவுகள் தோன்றுகிறது என்று விளக்குவதோடு கனவுகள் குறுகியவையாக காணப்பட்ட போதிலும் அவை அன்றாட உளநல வாழ்க்கைக்கு (Psychic life) பயனுடையதாக அமைகின்றது எனவும் குறிப்பிடுகின்றது.
5. Minoo Asadzandi (2018) என்பவர் தனது “Dream theory from the Perspective of Islam” எனும் ஆய்வுக் கட்டுரையில் உளவியல் தளத்தில் நனவிலி நிலையின் பிரதிலிப்பாக கனவுகனை விளக்குவதோடு இஸ்லாமிய பார்வையில் கனவுகள் எவ்வாறு காணப்படுகின்றது, நனவிலித் தன்மை குறித்து எவ்வாறு கூறப்படுகின்றது என்பதை அல்குர்ஆன், ஹதீஸ் என்பவற்றினை அடித்தளமாகக் கொண்டு விளக்குகின்றது.
6. ஜைனுல் ஆபிதீன்.பீ (2009) அவர்களால் வெளியிடப்பட்ட ‘‘இஸ்லாத்தின் பார்வையில் கனவுகள்’’ என்ற நூலில் கனவுகள் பற்றிய இஸ்லாமிய நோக்கு, கனவுகளின் வகைகள், நல்ல கனவுகள் யாவை, கெட்ட கனவுகள் யாவை, அல்குர்ஆனிலும் நபிமொழியிலும் கூறப்பட்டுள்ள சில கனவுகள், கனவுகளுக்கான விளக்கங்கள் என்பன தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.
7. ஆலிப் அலி அவர்களினால் எழுதப்பட்டுள்ள ‘‘நித்திரையில் ஒரு குறும்படம் கனவு’’ (2014) என்ற தலைப்பிலான கட்டுரையில் கனவு எவ்வாறு தோன்றுகிறது என்பது பற்றிய விஞ்ஞான விளக்கமும், இஸ்லாமிய பார்வையில் கனவுகள் பற்றிய கருத்துக்கள், அவை பற்றிய அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்கள், கனவுகளின் வகைகள் பற்றி குறிப்பிட்டுள்ளார்.

**கனவுகள் குறித்த சிக்மன்ட் பிரைடின் கருத்துக்கள்:**

கனவு பற்றிய ஆராய்ச்சிகளில் மிகவும் பிரசித்திபெற்றதும், முக்கியத்துவம் வாய்ந்ததுமாக விளங்குவது சிக்மன்ட் பிரைடின் கனவுகள் பற்றிய கோட்பாடாகும். உளப்பகுப்பாய்வு கோட்பாட்டின் ஒரு முறையாக அமைந்த கனவு விளக்கமுறை கனவு பகுப்பாய்வு கோட்பாடாக உருவாகியது. 1900ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட ‘‘கனவுளின் விளக்கம்’’ (The Interpretation of Dreams) என்ற நூல் உளவியல் வரலாற்றில் கனவுகள் பற்றி வெளியான முதல் விளக்க நூலாக அமைந்தது.

ஒரு மருத்துவராக, குறிப்பாக நரம்பியல் நிபுணராக விளங்கிய பிராய்ட் எத்தனையே புத்தகங்களில் தான் கண்டுபிடித்த உண்மைகளைச் சொல்லியிருந்தாலும் அவருடைய The

Interpretation of Dreams "கனவுளின் விளக்கம்" உன்னும் நூலே மிகச்சிறந்ததாகவும், உலகை மாற்றியமைத்த 5 நூல்களில் ஒன்றாகவும் கருதப்படுகிறது. (ரூமி, 2013:03)

"பிரபஞ்ச மனத்தை அறிந்துக் கொள்ள உதவும் ராஜபாட்டை" என்று பிராய்ட் கனவுகளை வர்ணித்தார். கனவுகள் யாவும் நனவில் நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றும் களமாக, வடிகாலாக அமைகிறது எனவும், அந்த ஆசைகள் பெரும்பாலும் பாலுணர்வு சம்பந்தப்பட்டதாகவே உள்ளன என்றும் கூறினார்.(ரூமி, 2013:05)

குறியீட்டு விளக்கமுறை, அவிழ்க்கும் முறை (Symbolic Interpretation , Decoding Method) என்பவற்றை, கனவுகள் வருங்காலத்தைச் சொல்பவையாக உள்ளன என்ற கருத்தே பைபிள் காலத்திலிருந்து (ரூமி, 2013:20) தீர்க்கதர்சிகளின் காலத்தில் இருந்து பெறப்பட்ட எச்சம்தான் என்று பிராய்ட் கருதுகிறார். சில கனவுகளை விளக்குவதற்கு இன்றைய விஞ்ஞானத்தால் முடியவில்லை. ஆனால் அந்தக்காலத்திலிருந்து போற்றி பாதுகாக்கப்பட்ட நம்பிக்கைகளே பெருமளவில் கனவுகளை விளக்க உதவுகின்றன. எனினும், கனவுகளுக்கு அர்த்தம் உண்டு என்றும் அவைகளை விளக்க ஒரு விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை சாத்தியம்தான் என்றும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும் என்றும் பிராய்ட் கூறுகிறார். (ரூமி, 2013:21)

கனவுகள் அனைத்தும் அர்த்தம் உள்ளவையாகவும் உள்பொருள் பொதிந்தவையாகவும் விளங்குகின்றன. ஒவ்வொரு கனவுக்கும் பின்னால் ஏதேனும் ஒரு உளக்கூறு அல்லது பல உளக்கூறுகள் தொடர்புபட்டிருக்கும். அந்த உளக்கூறுகளின் உந்துதலால்தான் கனவுகள் பிறக்கின்றன. கனவு உருவாக்கத்திற்கான மூலக்காரணி இந்த உந்துதலாத்தான் இருக்க முடியும். இம்மூலக்காரணியைக் கனவுகளின் பொருளாகக் கொள்கிறார் பிரைட். கனவுகளின் பொருளைக் கண்டுபிடிப்பதுதான் கனவுப் பகுப்பாய்வு அணுகுமுறையாகும். பிராய்டியத்திற்கு கனவுகள் மூலப்பொருட்களாக விளங்குகின்றன. (ரியால்.ஏ.எல்.எம், 2014)

பிராய்டின் கனவுகளின் உந்துதல்களாக குறிப்பிடுபவை நனவிலி மனதின் நிறைவேறாத ஆசைகளையும், வேட்கைகளையும்தான். அவை உளக்கூறுகளின் உந்துதலாக அமையும் போது வெளிப்படும் கனவுகளின் அர்த்தத்தை சாத்தியப்படுத்துகிறது. அவ் அர்த்தத்தை கண்டுபிடிப்பதே கனவுப் பகுப்பாய்வாகும்.(Dream analysis). (மாஹிர்.ஐ.எல்.எம்,அர்ச்சனா.பீ, 2017)

நனவிலியின் ஒழுங்கின்மை மற்றும் பகுத்தறிவின்மை காரணமாக அதிலிருந்து வெளிப்படும் கனவுகளும் அதே தன்மையிலேயே காணப்படும். கனவின் நனவிலி வேட்கையை கண்டு பிடித்தல் மற்றும் அவ்வேட்கைத் தீர்வாக கனவை இனம் காணல் என்பனவற்றின் மூலம் மனித உணர்வுகளை அடிப்படையாகக்கொண்டு கனவுக்கான விளக்கம் வழங்கப்படுகிறது.
நோய்க்குறிகள் கனவுகளாக வெளிப்படும் என்பதை கண்டுக்கொண்ட பிராயிட் தொடர்ந்து மேற்கொண்ட ஆய்வின் முடிவாக கனவு உருவாக்கமும் நோய்க்குறி உருவாக்கமும் இணையாகவிருப்பதை முன்வைக்கிறார்.

சிக்மண்ட் பிரைட் அறிவியல் ரீதியில் குறிப்பிடுகையில் அவர் பார்வையற்றவர்களுக்கு தோன்றும் கனவுகள் குறித்தும் பேசியுள்ளார். எவ்வாறு சாதாரணமானவர்களுக்கு கனவுகள் நனவிலியின் ஒடுக்கங்களாக தோன்றுகின்றனவோ அவ்வாறே பார்வையற்றவர்களும் தங்களது உணர்வுகளுக்கு ஊடாகவே உலகை காண்பதனால் அவர்களின் நனவிலியில் ஒடுக்கப்பட்ட உணர்வுகளாகவே அவர்கள் கனவுகளைக் காண்கின்றனர் எனவும் குறிப்பிடுகிறார்.

**கனவுகள் குறித்த இஸ்லாமிய பார்வை:**

இஸ்லாத்தை பொருத்த வரை தூக்கமும் ஒரு வகை மரணமேயாகும். அதாவது, அல்லாஹ் நாம் தூங்கும் போது எமது ரூஹை (ஆன்மா) கைப்பற்றுகிறான். ''அல்லாஹ் ஆன்மாக்களை அவை மரணிக்கும்போதும், மரணிக்காதவற்றை அவற்றின் நித்திரையின்போதும் கைப்பற்றுகிறான். பின்பு எதன்மீது மரணத்தை விதித்துவிட்டானோ அதை (தன்னிடத்தில்) நிறுத்திக் கொள்கிறான்; (இன்னும் வாழ வேண்டுமென நாடுபவற்றை ஒரு குறிப்பிட்ட தவணை வரை (வாழ்வதற்காக) அனுப்பி விடுகிறான்- சிந்தித்துப் பார்க்கும் மக்களுக்கு அதில் அத்தாட்சிகள் இருக்கின்றன.'' (அல்குர்ஆன்,39:42)

மேலுள்ள அல்குர்ஆனிய வசனத்தின் படி நாம் தூங்கும் போது எமது ரூஹை (ஆன்மா) கைப்பற்றி தூக்கத்திலிருந்து எழும்போது அதனை மீள அளிக்கிறான் என்ற விடயத்தை விளங்க முடிகிறது. அல்குர்ஆனின் தலைமை விரிவுரையாளர் மற்றும் நபி (ஸல்) அவர்களின் அன்புத்தோழர் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் மேற்கண்ட அல்குர்ஆனிய வசனத்திற்கு பின்வருமாறு விளக்கம் தருகிறார்கள். ''ஒவ்வொரு கொண்டது. ஆன்மாவில் அசையும் தன்மையும் மூச்சுவாங்கும் தன்மையும் உள்ளது. மனிதன் தூங்கும்போது அல்லாஹ் ரூஹை கைப்பற்றுவதில்லை. ரூஹ் தனது அசையும் தன்மையால் அந்நேரத்தில் சுற்றித்திரிகிறது. அப்பொழுது அந்த ரூஹ் மற்ற ரூஹ்களுடன் நடைபெறும் சம்பாஷனைகள் மற்றும் நிகழ்ச்சிகளே கனவுகளாகும். (ஆலிப் அலி:2014).

இஸ்லாத்தில் கனவுகள் நபிமார்களின் வாழ்க்கை வரலாற்றிலிருந்து முக்கியத்துவம் பெற்று விளங்குகிறது. நபிமார்களுக்கு தோன்றும் கனவுகள் வஹியின் ஒரு பகுதியாகவும் காணப்படுகிறது. அதனை, உபைத் இப்னு உமர் அறிவிக்கும் ''நிச்சயமாக நபிமார்களின் கனவாகிறது வஹியாக இருக்கும்'' (புஹாரி : 859) என்ற ஹதீஸின் மூலம் அறிந்துக்கொள்ளலாம். மேலும், இதனை தெளிவுபடுத்தும் விதமாக நபி இப்றாஹீம் (அலை) அவர்கள் கண்ட கனவையும் அது தொடர்பான சம்பவத்தையும் குறிப்பிடலாம். இப்றாஹீம் (அலை) அவர்கள் தமது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்து பலியிடுவதாக ஒரு கனவைக் கண்டார்கள். அதனைப் பற்றி தமது மகனிடம் கூறியபோது, இஸ்மாயீல் (அலை) அவர்கள் ''தந்தையே! உங்களுக்கு என்ன கட்டளையிடப்படுகிறதோ அதனை நிறைவேற்றுங்கள். அல்லாஹ் நாடினால், என்னை பொறுமையாளர்களில் ஒருவனாகக்

காண்பீர்கள்'' என்று கூறினார்கள். அதன்படியே, இப்றாஹீம் (அலை) அவர்கள் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுக்க முற்பட்ட போது, அதனைத் தடுத்து ஜிப்ரீல் (அலை) மூலமாக ஒரு ஆட்டைக் கொடுத்து அறுத்து பலியிடுமாறு அல்லாஹ் கட்டளையிட்டான். இச்சம்பவத்தை ''யா இப்றாஹீம்! திடமாக நீர் கண்ட கனவை மெய்ப்படுத்தினீர். நிச்சயமாக நன்மை செய்வோருக்கு நாம் இவ்வாறே கூலி கொடுத்திருக்கிறோம்…''(அல்குர்ஆன், 37:102-110) என்ற அல்குர்ஆன் வசனங்களில் காணலாம். மேலே குறிப்பிடப்பட்ட ஹதீஸ் மற்றும் அல்குர்ஆன் வசனங்கள் மூலம் நபிமார்களின் கனவுகள் வஹியின் ஒரு பகுதியாகவும் காணப்பட்டதை அறியலாம்.

கனவுகள் யாவும் அர்த்தம் நிறைந்தவை என்று இஸ்லாம் கூறவில்லை. அதேபோல் அர்த்தமற்றவை என்றும் கூறவில்லை. கனவுகளில் அர்த்தமுள்ளவையும் உள்ளன, அர்த்தமற்றவையும் உள்ளன என்பதுதான் இஸ்லாத்தின் நிலையாகும்.

அல்குர்ஆன் கனவை மனாம், ருஃயா, அஹ்லாம் என்ற சொற்களில் பயன்படுத்தியுள்ளது. அல்குர்ஆனில் ''மனாம்'' என்று நான்கு இடங்களிலும் ( 8:43, 30:23, 37:102, 39:42) ''ருஃயா'' என்று சொல் ஏழு இடங்களிலும் (12:4, 12:5, 12:43, 12:100, 17:60, 37:105, 48:27) ''அஹ்லாம்'' என்ற சொல் மூன்று இடங்களிலும் (12:44, 21:52, 4:32) குறிப்பிடப்பட்டுள்ளன.

கனவுகள் இஸ்லாமிய நோக்கில் மூன்று வகைகளாக பார்க்கப்படுகின்றன. அதனை பின்வரும் ஹதீஸின் மூலம் விளங்கிக்கொள்ள முடியும். ''கனவுகள் மூன்று வகைப்படும். நல்ல கனவுகள் அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் நற்செய்தியாகும். மற்றொன்று ஷைத்தானின் புறமிருந்து வரும் கவலையை ஏற்படுத்தும் கனவாகும். மூன்றாவது உள்ளத்தில் மனிதன் காணுகின்ற கனவாகும்.'' (ஆதாரம்- முஸ்லிம்: 4200)

1. இறைவன் புறமிருந்து வரும் கனவுகள்.

அல்குர்ஆன் ருஃயா அல்லது முபஷ்ஷிரா என்று குறிப்பிடுகிறது. இவை பெரும்பாலும் நற்செய்திகளாகவும் முன்னறிவிப்புக்களாகவும் இருக்கும்.

''நல்ல கனவுகள் நுபுவ்வத்தின் 46 பகுதிகளில் ஒன்றாகும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். (புஹாரி: 6987, 6988, 6989, 6994)

''தூதுத்துவமும், நபித்துவமும் முற்றுப்பெற்றுவிட்டன. எனவே எனக்குப் பின் எந்த நபியும் இல்லை. எந்த ரஸுலும் இல்லை'' நபி (ஸல்) கூறினார்கள். இது மக்களுக்கு கவலை அளிப்பதாக இருந்தது. ''எனினும், நற்செய்தி கூறுபவை- முபஷ்ஷிராத் உள்ளன. நீங்கள் காணும் கனவுகள் நபித்துவத்தின் ஒரு பகுதியாகும்'' என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (அஹ்மத்: 13322)

எனவே நற்செய்தி கூறும் வகையில் கனவு கண்டால் நமக்கு ஏற்படவுள்ள நன்மையை அல்லாஹ் முன்கூட்டியே எமக்கு அறிவிக்கிறான் என கருதிக்கொள்ள வேண்டும் என இஸ்லாம் கூறுகிறது. எதிர்காலத்தில் நடக்க கூடியவற்றை முன்னறிவிப்புச் செய்பவையும் இறைவனிடமிருந்து வரும் கனவுகளே ஆகும். அவை மார்க்கம் சம்பந்தப்பட்டவையாகவோ அல்லது தனிமனிதன் பற்றியதாகவோ இருக்கலாம். எதிர்காலத்தில் ஏற்படுபவை நன்மையாகவோ அல்லது கெடுதியாகவோ இருக்கும் என்பதனை இறைவன் முன்னறிவிப்பு செய்கின்றான். இவ்வாறான கனவுகள் நடுநிசி வேளைகளிலேயே ஏற்படும் என நபி (ஸல்) கூறியுள்ளார்கள்.

''கனவுகளில் மிக உண்மையானது ஸஹர் நேரங்களில் தோன்றும் கனவுகளாகும்'' (திர்மிதி) இவ்வாறாக இறைவன் புறமிருந்து கனவுகள் குறித்து அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

2. ஷைத்தான் ஏற்படுத்தும் கனவுகள்

இதனை அல்குர்ஆன் ''ஹுல்ம்'' என சொல்கிறது. Evil dream, Night mare என சொல்லப்படும் பயங்கரக் கனவுகளும் கவலையை ஏற்படுத்தும் கனவுகளும் இவ்வகையில் அடங்கும். நமக்கு நெருக்கமானவர்கள் மரணிப்பதை போலவோ, பேய், பிசாசு போன்றவை நம்மை பயமுறுத்துவது போல, ஆபாசமான விடயங்கள் கனவில் வருதல் போன்ற கனவுகள் ஷைத்தான் ஏற்படுத்தும் கனவுகளாகும். இவை மனிதர்களை எவ்விதமும் பாதிக்காது என இஸ்லாம் கூறுகிறது. இவை போன்ற கனவுகளை தவிர்க்க சில தூங்கும் ஒழுங்குகளையும் இஸ்லாம் கூறுகிறது. இது பற்றி நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளதை புஹாரி 3292, முஸ்லிம் 4200, 4212 ஆகிய ஹதீஸ்களில் காணலாம்.

3. மனிதர்களின் உள்ளத்தில் அல்லது நினைவுகளில் இருந்து உருவாகும் கனவுகள்.

இவற்றை ''ஹதீஸுன் நப்ஸ்'' என அரபியில் அழைப்பர். நாம் விழித்திருக்கும் நேரம் நடைபெறும் நிகழ்வுகளை அவை நம் கருத்தில் பதியாவிட்டாலும் அவை நமது நனவிலி மனதில் சேமித்து வைத்திருக்கும். தூங்கும் நேரத்தில் மூளை அவற்றை கோர்வை செய்யும். அவ்வாறு செய்கையில் மூளையில் தோன்றும் Electro magnatic waves மூளையின் Cortex பகுதியை தாக்கும் போது இவ்வாறான கனவுகள் தோன்றுகின்றன. நமது புலன்களால் உணரப்பட்ட விடயங்கள் தவிர்த்து புதிய விடயங்கள் அவ்வாறான கனவுகளில் தோன்றாது. அதாவது, நாம் வாழ்நாளில் அதுவரை கண்டில்லாத ஒரு நபரோ, சத்தமோ எதுவுமே புதிதாக கனவுகளில் தோன்றாது.

நனவிலியின் (Unconcious) ஒழுங்கின்மை மற்றும் பகுத்தறிவின்மை காரணமாக அதிலிருந்து வெளிப்படும் கனவுகளும் அதே தன்மையிலேயே காணப்படும். (மாஹிர்.ஐ.எல்.எம், பி.அர்ச்சனா, 2017) இவை அர்த்தம் அற்றவையாகவும், குழப்பகரமானதாகவும் இருக்கும். ஏதோ ஒரு விடயத்தில் ஆரம்பித்த கனவு வேறு ஏதோ ஒரு விடயத்துடன் தொடர்பாக சென்று

முடியும். இவை மனிதனுக்கு சந்தோஷத்தையோ, கவலையையோ அளிக்காது என்று இஸ்லாம் கூறுகிறது.

**பகுப்பாய்வும் முடிவுகளும்**

கனவுகள் பற்றிய பொதுவான கண்ணோட்டங்கள் எம்மை குழப்பமடையச் செய்வதாகவும் பயத்தினை உண்டுபண்ணுபவையாக அமைந்த போதிலும் அது பற்றிய விஞ்ஞான ரீதியான விளக்கங்களும் இஸ்லாமிய ரீதியான பார்வையும் எம்மை அறிவியல் ரீதியில் புதிய கோணங்களில் சிந்திக்கத் தூண்டுகின்றன. இந்த வகையில் இவ்வாய்வானது இவ்விரு போக்கினையும் ஒப்பிட்டு பகுப்பாய்வு செய்வதாக அமைந்துள்ளது. இதனால் இவற்றுக்கிடையிலான ஒத்த தன்மை, வேறுபாடுகள் என்பன நுணுகி ஆராயப்பட்டுள்ளது.

நாம் விழித்திருக்கம் நேரத்தைவிட தூங்கும் நேரமே நமது மூளை அதிகளவு வேலைசெய்கிறது. அதாவது நாம் விழித்திருக்கம் நேரம் நடைப்பெறும் நிகழ்வுகளை சேகரிக்கும் மூளை அவற்றை நனவிலி மனதில் (Unconcious) பதித்து வைக்கும். தூங்கும் நேரம் மூளை அவற்றை கோர்வை செய்யும் போது மூளையில் தோன்றும் Electro magnetic waves மூளையின் Cortex பகுதியை தாக்கும் போது கனவுகள் தோன்றுகின்றன என கனவுகள் பற்றிய விஞ்ஞான ஆராய்ச்சிகள் கூறுகின்றன. இந்த விளக்கமானது கனவுகள் பற்றிய சிக்மன்ட் பிரைட்டின் விளக்கம், கனவுகள் பற்றிய இஸ்லாமிய கருத்துக்கள் என்பவற்றுடன் தொடர்புடையதாகவே இருக்கிறது. அதாவது ''நனவிலி மனதின் நிறைவேறாத ஆசைகளையும், வேட்கைகளையும் பூர்த்தி செய்யும் களமாக கனவுகள் வெளிப்படுகின்றன'' என்ற சிக்மன்ட் பிரைட்டின் விளக்கம், நினைவுகளில் இருந்து இஸ்லாத்தினுடைய கனவுகளில் மூன்றாவது வகையான மனிதர்களின் உள்ளத்தில் அல்லது நினைவுகளில் இருந்து உருவாகும் கனவுகள் என்பன ஒரே மாதிரியான அர்த்தத்தை தரக்கூடியதாக உள்ளன. இங்கு கனவுகள் இடம்பெறுவதற்கான காரணமாக நனவிலி மனதின் எண்ணங்கள் காணப்படுகின்றன என்ற விடயம் பொதுவான விளக்கமாக அமைகிறது.

கிறிஸ்தவர்களின் பைபிளிலிருந்து கனவுகளுக்கு விளக்கம் சொல்லிய குறியீட்டு விளக்கமுறை, அவிழ்க்கும் முறை (Symbolic Interpretation , Decoding Method) பற்றிக்கூறி ஆச்சர்யப்பட்ட பிரைட் அவற்றிற்கும் மேலாகவே ''கனவுகளுக்கு அர்த்தம் உண்டு என்றும் அவைகளை விளக்க ஒரு விஞ்ஞான பூர்வமான அணுகுமுறை சாத்தியம்தான் என்றும் என்னால் உறுதியாகச் சொல்ல முடியும்'' என்றும் பிராய்ட் கூறுகிறார். இதன் பொருள் முன்னர் நிலவிய கனவுகள் தொடர்பான விளக்கமுறைகளை அவர் பிழையெனக் கூறவோ, மறுக்கவோ இல்லை. இங்கு ''பைபிள் காலம்'' என குறிப்பிடப்படும் வரலாற்றில் வரும் கதாப்பாத்திரங்களான Aebraham, Joseph போன்றவர்கள் இஸ்லாமிய வரலாற்றில் இப்றாஹீம் (அலை), யூசுப் (அலை) என நபிமார்களாக அடையாளம் காட்டப்படுகின்றனர். இஸ்லாத்தில் கனவுகள் தொடர்பான அல்குர்ஆன் வசனங்கள் பெரும்பாலும் இந்நபிகளின்

வரலாற்றுடன் தொடர்புபட்டவையாக காணப்படுகின்றன. எனவே இஸ்லாம் அல்குர்ஆனிலோ, கிறிஸ்தவம் பைபிளிலோ கூறியுள்ள கனவுகள் பற்றிய விளக்கங்களை சிக்மன்ட் பிரைட் நிராகரிக்கவோ, மறுக்கவோ இல்லை என்பது தெளிவாகிறது.

சிக்மன்ட் பிரைடின் கருத்துப்படி கனவுச்செயல்களாக குழந்தைக்கால நினைவுகளைத் திரும்பக் கொண்டு வருதல், நனவிலி விளைவுகளை நிறைவேற்றும் வண்ணம் கனவுகள் அமைந்து, விளைவுகளை மாற்று வடிவில் வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் மனிதன் நோயிலிருந்து பாதுகாக்கப்படுகிறான், கனவுகள் கவலையையும் (Anxiety), பயத்தையும் (Phobia) கனவில் பல வடிவங்களில் வெளிப்படுத்தி அவற்றிலிருந்து மனத்தைப் பாதுகாக்கிறது. (ரியால்.ஏ.எல்.எம்,2018:216) அதாவது, நாம் நினைக்க மறுக்கும் பயம் தரக்கூடிய விடயங்கள் கனவுகளாக வெளிப்பட்டு மனத்தை பாதுகாக்கிறது. கனவுகள் பற்றிய இஸ்லாமிய விளக்கப்படி கவலையையும், பயத்தையும் ஏற்படுத்தும் கனவுகள் ஷைத்தான் ஏற்படுத்தும் கனவுகளே ஆகும். அவற்றை தவிர்க்க தூங்கும் முன்னர் பயம் தரக்கூடிய பேய்,பிசாசு போன்ற கதைகனை கதைத்தல், அது தொடர்பான திரைப்படங்களை பார்த்தல் போன்றவைகளால் இவ்வாறான கனவுகளை ஷைத்தான் தூக்கத்தில் ஏற்படுத்துவான் என இஸ்லாம் கூறுகிறது. இங்கு நம் மனதில் பதிந்துள்ள பயத்தை ஏற்படுத்தக்கூடிய கவலையை தரக்கூடிய விடயங்களே இவ்வாறான கனவுகளை ஏற்படுத்துகின்றன என்ற பிராய்டிய கருத்து, இஸ்லாமிய கருத்துடன் ஒத்துப்போகின்றது.

பிராய்டின் கனவுகள் குறித்த விளக்கத்தில் அவர், கனவுகள் யாவும் நனவில் ஒடுக்கப்பட்ட மனதின் நிறைவேறாத ஆசைகளை நிறைவேற்றும் களமாக, வடிகாலாக அமைகிறது எனவும் இந்த ஆசைகள் பெரும்பாலும் பாலுணர்வு சம்பந்தப்பட்டதாகவே உள்ளன என்றும் கண்டறிந்து கூறினார். பிராய்ட் பொதுவாக மனிதனுடைய எல்லா செயல்பாடுகளுக்கும் ஆழ்மனதில் இருக்கும் பாலுணர்வே காரணம் என்று நம்பினார். இங்கு பாலுணர்வு அடிப்படையில் வரக்கூடிய கனவுகள் இஸ்லாமிய பார்வையில் ஷைத்தான் ஏற்படுத்தக்கூடிய கனவுகளாகவே நோக்கப்படுகிறது. பாலியல் சம்பந்தமான ஆபாசமான கனவுகளை ஷைத்தானே மனித உள்ளத்தில் ஏற்படுத்துகின்றான் என்றும் அவை மனிதர்களுக்கு தீங்கு இழைக்கமாட்டா என்றும் இஸ்லாம் கூறுகின்றது. இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் கெட்ட கனவுகள் யாவுமே ஷைத்தானின் கனவுகள். அவை கனவுகளில் ஒரு வகையாகவே இனங்காணப்படுகின்றன. ஆனால் சிக்மன்ட் பிரைடின் கருத்துப்படி கனவுகள் அனைத்துமே நனவிலி மனதின் பாலுணர்வுகள்தான் கனவுகளாக வருகின்றன. பிராய்டின் கருத்தானது இஸ்லாம் கூறுகின்ற கருத்துக்களில் ஒரு பகுதி பற்றியதாகவே இருந்தாலும் அவை விளக்கப்படுகின்ற விதம் சில இடங்களில் வெவ்வேறாக காணப்படுகின்றன என்பதை இனங்காணலாம்.

மேலும், எதிர்காலத்தை பற்றி முன்னறிவிப்புச் செய்பவையாக அல்லாஹ்விடமிருந்து வரும் கனவுகள் பற்றி இஸ்லாம் பேசுகிறது. அவை அடிக்கடி கனவில் தோன்றி முன்னறிவிப்பு செய்யக்கூடியதாக இருக்கும் எனவும் பெரும்பாலும் நல்ல விடயங்களையும், சில நேரங்களில்

ஆபத்துக்களையும் முன்னறிவிப்புச் செய்யும் என்றும் கனவுகளை பற்றி விளக்கிய இஸ்லாமிய அறிஞர்கள் கூறியுள்ளார்கள். இது தொடர்பாக பிராய்டிய கனவு விளக்கங்களிலும் கூறப்பட்டுள்ளது. ''கனவுகள் எதிர்க்காலத்தை முன்கூட்டியே அறிவிக்கும் தன்மை வாய்ந்தவை. இக்கருத்து தவறானதென்று வாதிடுவதற்கில்லை. இயற்கை உளவியலில் இதற்கு விளக்கம் காண முடியும்'' என்று பிராய்ட் கூறுகிறார். (ரூமி,2013:09) அத்துடன் நோய்களை கண்டறிய கனவுகள் உதவுவதாகவும் பிராய்ட் குறிப்பிட்டார். அடிக்கடி கவலையாக கனவைக் கண்ட ஒரு 43 வயதான பெண்மணிக்கு இருதயநோய் இருப்பது தெரியவந்ததுடன் நெரிசல், ஓட்டம் முதலியவைகள் கனவில் வரும்போது அது நுரையீரல் பாதிப்பை அறிவிப்பதாகவும் தனது ''கனவுகளின் விளக்கம்'' நூலில் பிரையிட் குறிப்பிட்டுள்ளார். எனவே, முன்னறிவிப்பு பற்றிய கனவுகளைப்பற்றி இஸ்லாமிய கருத்துக்களும் உள்ளன, சிக்மன்ட் பிராய்டின் கருத்துக்களும் உள்ளன.

எல்லாக் கனவுகளுமே பெரும்பாலும் குறியீட்டுத்தன்மை கொண்டவை. கனவின் காட்சிகளே குறியீடுகள். நம் நனவு வாழ்வின் அனுபவ உணர்வுகளை கனவுகள் காட்டுவதில்லை. எனவேதான் கனவுகளை விளக்க வேண்டிய அவசியமேற்படுகிறது. கனவின் காட்சிகள் பெரும்பாலும் தனிக்குறியீடுகளாகவே இருக்கும். கனவு கண்டவனின் வாழ்க்கைப் பின்னணியை நாம் அறியாவிட்டால் கனவெண்ணங்களை அறியமுடியாது. எனவே கனவுகள் குறியீட்டுத்தன்மை கொண்டவை அல்லது சங்கேத மொழி பேசுபவை அல்லது உள் விஷயம் கொண்டவை என்று அறியலாம். கனவின் வெளி விஷயம், குறியீடு அல்லது குறியீடுகளாகும். (ரூமி,2013:09) கனவின் குறியீடுகள் பற்றி சிக்மன்ட் பிராயிட் குறிப்பிட்டுள்ளதைப் போல் கனவை அறிய உதவும் குறியீடுகள் பற்றி இஸ்லாத்திலும் கருத்துக்கள் காணப்படுகின்றன.

நல்ல கனவுகள் மூலம் இறைவன் நற்செய்தி கூறுகிறான் என்றால் அதன் விளக்கம் நமக்கே புரியும் வகையில் தான் கூறுவான். கனவு காண்பவரின் காலம், அவர் சந்தித்த பிரச்சினை போன்றவற்றுக்கேற்ப அதன் பலன் அமையலாம் என பின்வரும் அல்குர்ஆன் வசனம் விளக்ககிறது.

''அனைத்தையும் அறிந்தவனை (அல்லாஹ்வை) போல் வேறு எவரும் உமக்கு விளக்க முடியாது'' என்று அல்லாஹ் கூறுகிறான்.'' (அல் குர்ஆன் 35:14)

நாம் கனவில் காண்பது யாவும் உண்மை நிகழ்ச்சிகள் தாமா? நாம் காணுகின்ற நல்ல கனவுகளையும் கெட்ட கனவுகளையும் வேறுபடுத்தி எவ்வாறு கண்டறிவது? என்பன போன்ற பல கேள்விகளுக்கு குர்ஆன், நபிவழியைக் கொண்டு விளக்கத்தை அறிந்து கொண்டால் கனவுகள் மூலம் ஏற்படும் கேடுகளிலிருந்து நாம் விடுபட முடியும். (ஜைனுல் ஆபிதீன்,2009)

நூற்றுக்கணக்கான கனவுகளை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டு பல விடயங்களைக் கண்டறிந்து கனவுக் கோட்பாட்டை உருவாக்கிய சிக்மன்ட் பிராய்ட் அதன் மூலம் அவர் அனைத்து கனவுகளும் அர்த்தம் உடயவையாகவும், உட்பொருள் கொண்டவையாகவும் விளங்குகின்றன எனும் கருத்தை வலியுறுத்தினார். கனவுகளை விஞ்ஞான முறைப்படி விளக்கிக் கூறிய

பிராய்ட் கனவுகளில் பகுத்தறிவற்ற தன்மையே அதிகமாகக் காணப்படுவதாக அறிவித்தார். இஸ்லாத்தின் பார்வையில் அனைத்துக் கனவுகளுமே அர்த்தமுடையவை அல்ல. கனவுகளில் சில அர்த்தமுடையனவாகவும் சில அர்த்தமற்றவையாகவும் பார்க்கப்படுகின்றன. அர்த்தமுடைய கனவுகள் என இஸ்லாம் கூறுவது இறைவனிடமிருந்து வரும் கனவுகள் மாத்திரமேயாகும். அவை நல்ல கனவுகள் என்று குறிப்பிடப்படுகின்றன. ஷைத்தானின் புறமிருந்து வரும் கனவுகளோ அல்லது மனிதனின் மனதிலிருந்து வரும் கனவுகளோ இஸ்லாத்தின் பார்வையில் அர்த்தமற்ற கனவுகளாகவே பார்க்கப்படுகின்றன. இவ்வாறு கனவுகளின் அர்த்தம் பற்றிய பகுப்பாய்வில் சிக்மன்ட் பிராய்டின் கருத்துக்கு முரண்பாடான வகையிலேயே கனவுகள் பற்றிய இஸ்லாமிய பார்வை அமைந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது.

**முடிவுரை**

கனவுகள் தொடர்பான அறிவியல் விளக்கங்களை முன்வைக்க தலைப்பட்ட பிராய்ட் கனவுகள் பற்றிய சமயம்சார் கருத்துக்களை மறுக்கவில்லை. கனவுகள் பற்றிய விளக்கங்களுள் சிக்மன்ட் பிரைட்டின் கருத்துக்களும் இஸ்லாமிய பார்வையும் வெவ்வேறு கண்ணோட்டங்களில் அமைந்திருப்பினும் அவற்றின் கருத்துக்கள் கூறும் சாரம்சங்கள் பெரும்பாலும் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகின்றனவாகவும், சில நேரங்களில் முரண்பட்டவையாகவும் காணப்படுகின்றன. ஏனெனில் கனவுகள் பற்றிய கருத்துக்கள் இஸ்லாமிய பார்வையில் சமய மற்றும் அறிவியல் அடிப்படையிலும், சிக்மன்ட் பிரைட்டின் விளக்கத்தில் அறிவியல் மற்றும் உளவியல் அடிப்படையிலும் அமைந்துள்ளன. கனவுகள் தோன்றுவதற்கான உந்துதலாக அமைபவை நனவிலி மனதில் பதிந்துள்ள விடயங்களே என்ற அறிவியல் உண்மையை தழுவியதாகவே பிராய்டின் முழு கனவு பகுப்பாய்வு விளக்கங்களும் உள்ளன. அதேவேளை இவ்வறிவியல் உண்மை கூறுகின்ற விடயம் இஸ்லாமிய பார்வையை பொறுத்தவரையில் மூன்றில் ஒரு பகுதியாக மட்டுமே உள்ளன. இவ்விரண்டு கண்ணோட்டத்திலும், பயம் மற்றும் கவலையை ஏற்படுத்தும் கனவுகளுக்கான காரணங்கள் அவை தொடர்பான விடயஙங்களை பார்த்தல், கேட்டல் மற்றும் சிந்திப்பதனால் ஆகும் என்ற காரணம் ஒன்றாகவே உள்ளது.

பிராயிட் கனவுகள் குறித்து குறிப்பிடுகையில் அவை நனவிலி மனதின் நிறைவேறாத ஆசைகளால் ஏற்படுவன மற்றும் அர்த்தமுடையவை என கூறுபவற்றை இஸ்லாம் ஷைத்தான் ஏற்படுத்தும் கனவுகள் எனவும் அவை அர்த்தமற்றவை எனவும் கூறுகின்றது. முன்னரிவிப்புக்களான கனவுகள் பற்றியும் கனவுகளின் குறியீட்டு விளக்கங்கள் பற்றியும் பிராய்டிய மற்றும் இஸ்லாமிய கருத்துக்கள் காணப்படுவதுடன் அவை ஒத்த தன்மையுடையனவாக உள்ளன. எனவே பிராய்டின் கருத்துக்கள் மற்றும் இஸ்லாமிய பார்வை இரண்டிலுமே குறிப்பிடப்படுகின்ற கனவுகள் யாவும் ஒரே தன்மையைக் கொண்டதாகவும் அவற்றின் விளக்கங்களும் கூட பெரும்பாலும் ஒத்துபோகின்றனவாகவும் இருந்தாலும் உளவியல், சமயம் என்ற இருவேறு அடித்தளங்களாக இருப்பதனால் அவை பற்றிய புரிந்துணர்வு வேறுப்பட்டதாக காணப்படுகிறது.

**Acknowledgment**

Researchers are thankful to Proceeding 8th International Symposium- 2021. This work is not possible without the funding support and necessary facilities for the preparation and we thank to the providers for their support. The final out -come of this research paper required some guidance and assistance from some people and we would not forgot to thank them.

**References**

நூல்கள்

- Freud, Sigmund. (1939). *An outline of Psychoanalysis*. New York, Norton.
- Freud, Sigmund. (1953). *An outline of Psychoanalysis*. London, Hogart.
- Freud, Sigmund.(1900). *The Interpretation of Dreams*. Retrived from: https://www.Sigmundfreud.net/the-interpretation-of-dreams-pdf-ebook.jsp
- இரவிச்சந்திரன், தி.கு. (2005). *சிக்மண்ட் ஃப்ராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்.* அலைகள் வெளியீட்டகம்.
- நாகூர் ரூமி, *சிக்மன்ட் பிரைட் கனவுகளின் விளக்கம்* Retrived from: https://tnsocialscience.blogspot.com/2018/11/pdf-download_3.html?=1
- றியால், ஏ.எல்.எம். (2018). *உளவியல் மூலக் கோட்பாடுகள்.* மெஸ்ரோ வெளியீடு.

ஆய்வுக்கட்டுரைகள்

- Marius Dumitrescu.(2019). *Revealing the unconscious through dreams in Sigmund freud's psychoanalysis.* Postmodern openings.10(4), 144-152. Retrived from: https://www.researchgate.net/publication/338050903
- Minoo Asadzandi.(2018) *Dream theory from the perspective of Islam*. International Journal of Psychotherapy Practie and Research. 3(1),1-8. Retrived from: https://www.researchgate.net/publication/326841615
- Sibi.K.J,.(2020). *Sigmund Freud and Psychoanalytic Theory*. Langlit.An International Peer reviewed open Acces Journal. 75-69. Retrived from: https://www.researchgate.net/publication/342610778
- றியால், ஏ.எல்.எம். (2014). *சிக்மண்ட் பிரொய்டின் உளப்பகுப்பாய்வு அணுகுமுறை.* Social Sciences and Humanities. Proceeding 4th International Symposium, SEUSL. 216 -220
- மாஹிர், ஐ.எல்.எம்., அர்ச்சனா, பீ. (2016). *கனவு பற்றிய எண்ணக்கரு: சிக்மனண்ட் பிராய்ட்டின் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு பகுப்பாய்வு.* South Eastern University Arts Research Session – 2016. 53 – 55.

இணையத்தளங்கள்

- ஆலிப் அலி. (2014). *நித்திரையில் ஒரு குறும்படம் "கனவு".* Retrieved from: http://aliaalifali.blogspot.com/2014/10/blog-post_3.html?m=1
- தேவேந்திரன். (2019). "*சிக்மண்ட் ஃ ப்ராய்ட்டின் கனவுகளின் விளக்கம்*". Retrieved from: https://deivendrank.blogspot.com/2019/10/blog-post_13.html.
- ஜைனுல் ஆப்தீன், பீ. (2009). "*இஸ்லாத்தின் பார்வையில் கனவுகள*". Retrieved from: https://mail.jesusinvites.com/books/islathin-parvaiyil-kanavukal/#.XOJkMnlX6Db
- Retrieved from: http://www.tamililquran.com/muslimdisp.php?start=4549

- Retrieved from: http://majiang.ru/ta/diszajjn-interea/snovideniya-s-pozicii-freida-analiz-snovidenii-po-zigmundu-freidu/


Youtube காணொலிகள்


- Aalif Ali.(2020.08.07), கனவில் நடந்தவை நிஜத்திலும் நடக்கலாம்.| YOUR DREAMS MAY COME REAL. [VIDEO] Youtube. Retrived from: https://youtu.be/EBc_UP8
  Madan Gowri. (2017.08.21). Dreams explained | Tamil. [Video] Retrived from: https://youtu.be/riadafzjeLk

- MR.AR.(2020.08.16), INTERPRETAION OF DREAMS|UNDERSTANDING DREAMS| SIGMUND FREUD| TAMIL| ABDUR RAHMAN|MR. [VIDEO] Youtube. Retrived from: https://youtube.be/rsvcXQMt4fE

- Raj.(2019.04.05). Dreams Mystery Tamil | What is Dream? Tamil| Why Do We Dream? Tamil| Tamil LIVE Raj. [Video] Youtube. Retrived from: https://youtu.be/mmuQI962iFA

- Tamil Muslim channel.(2019.11.25) கனவுகளின் ரகசியங்கள் | Dreams in Islam Tamil| | Tamil Bayan.[VIDEO] Youtube. Retrived from: https://youtu.be/SDRKE86QR_0